


தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR




# பொறியியல் கதிர்


கதிர் 44 | பாரிப்பு 8 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஏப்ரல் 2013


## சரித்திர சாதனை படைத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றி



மத்திய அரசின் அரசிதழில் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பினை வெளியிட செய்து, தமிழகத்திற்கு நிரந்தர சட்ட பூர்வ உரிமையும், அங்கீகாரத்தையும் பெற்று தந்து சாதனை படைத்துள்ள **மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.


நூற்றாண்டு விழா சங்கம்

தோற்றம் 1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**

நூற்றாண்டு 2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

**Form No. II**

(See Rule 8 Of the TamilNadu Societies Registration Rules,1978)

**CERTIFICATE OF REGISTRATION UNDER SECTION 10 OF THE TAMIL NADU**

ACT, 1975 (TAMIL NADU ACT 27 OF 1975)

## CERTIFICATE OF REGISTRATION OF SOCIETIES

**Sl. No.: 321 / 2007**

I hereby Certify that

TAMIL NADU ENGINEERING ASSOCIATION

has this day been Registered Under The Tamil Nadu Societies Registration Act,1975

(Tamil Nadu Act 27 of 1975).

Given under my hand at CHENNAI CENTRAL

this 30 th day of November 2007

**Seal :**


**Station :**

THE SEAL OF THE REGISTRAR OF SOCIETIES CENTRAL CHENNAI.

30/11

**Signature of the Registrar**

30/11



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஜய வருடம் சித்திரை மாதம் 2-ம் நாள் (15.04.2013) திங்கட்கிழமை பஞ்சமி திதியும், மிருகசீரிஷ நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய நலமிகு நன்னாளில் காலை 6.30 மணிக்குமேல் 7.30 மணிக்குள் மேஷ லக்னத்தில்

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் முத்தாக்கவுண்டனூர், தெய்வத்திரு.ஆறுமுகப்படையாட்சி-பழனியம்மாள், தெய்வத்திரு.கூத்தப்படையாச்சி-வள்ளியம்மாள், பழனியம்மாள், தெய்வத்திரு.இராமு படையாட்சி-லட்சுமியம்மாள் அவர்களின் பேரனும், இராஜேந்திரன்-அஞ்சலை அவர்களின் குமாரனுமான திருநிறைச்செல்வன்





**Dr. இரா. கார்த்திகேயன்**, M.B.B.S.,

(அரசு மருத்துவர், சேராப்பட்டு)

என்கிற மணமகனுக்கு


சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் முத்தாக்கவுண்டனூர், தெய்வத்திரு.குமாரசாமி படையாட்சி-நல்லம்மாள், ஆணையம்பட்டிபுதூர் தெய்வத்திரு.பெரியசாமி-பச்சியம்மாள் அவர்களின் பேத்தியும், கு.தமிழ்ச்செல்வன்-அமுதவள்ளி அவர்களின் குமார்த்தியுமா திருநிறைச்செல்வி

**த. கனிமொழி**, B.E.,

(அஞ்சல்துறை, ஆத்தூர்)

என்கிற மணமகளை

இல்வாழ்க்கைத் துணைவியாக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி திருமணம் **வாழப்பாடி கூத்தப்படையாட்சி - பழனியம்மாள் (வாழப்பாடியார்) திருமண மண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் அன்புள்ள,

**Er. ஆ. இராஜேந்திரன்,** D.C.R.E., B.E.,

இளநிலைப் பொறியாளர், பொ.ப.து.,

நீ.ஆ. அமைப்பு, நாமகிரிப்பேட்டை..

Cell: 98426 97170, 80125 33116.

**பொதுச் செயலாளர் மடல்**

மடல் – 8(2012-2013)

# தொடரும் நம் பயணம்......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

நம் தலையாய பிரச்சினையாக இருக்கக் கூடிய இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறைக்காக நான்கு கட்ட போராட்டம் அறிவித்திருந்தோம். கடந்த 19.03.2013 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரை சந்தித்த பொழுது முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களை வரவழைத்து விவாதித்தார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை செயலாளர், முதன்மை தலைமைப் பொறியாளர் ஆகியோர் இளநிலைப் பொறியாளர் பணிவரன்முறை குறித்து விவாதித்தனர். 19.03.2013 அன்று மாலை மீண்டும் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களை சந்தித்து போது தற்போது உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் இடையே விகிதாச்சார மீறல் (Ratio Imbalance) இல்லை. கண்டிப்பாக இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய வேண்டும் என்று அரசுக்கு கருத்துரு அனுப்புவதாக கூறினார்.

20.03.2013 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரை சந்தித்த போது, முதன்மை தலைமைப் பொறியாளர் அரசுக்கு கருத்துரு அனுப்பினால் மிகுந்த காலதாமதம் ஏற்படும். அதனால் பொதுப்பணித்துறை, பணியாளர் மற்றம் நிர்வாக சீர்திருத்தத்துறை, சட்டத்துறை, முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலக உயர் அதிகாரிகள் மட்டத்தில் கூட்டம் நடத்தி, கூட்ட நடவடிக்கைகள் குறிப்பு (Minutes of the Meeting) பதிவு செய்து அதனடிப்படையில் இளநிலைப் பொறியாளர்களை உடனடியாக பணிவரன்முறை செய்ய வேண்டும் என்று கூறினோம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த பிரச்சினையை விரைவாக முடித்து தருவதாகவும், அதனால் போராட்டம் வேண்டாம் என்றும் கூறினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் விரைந்து இந்த பிரச்சினையை முடித்து தருவதாக உறுதிமொழி அளித்துள்ளதால் நாம் அறிவித்திருந்த நான்கு கட்ட போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது.

ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை பணிவரன்முறை செய்ய கோரியிருந்தோம். 1999 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பட்டியலை தயாரித்து அவர்களை பணிவரன்முறை செய்ய, அந்த பட்டியலில் உள்ளவர்கள் பணிபுரியும் அலுவலகங்களுக்கு கருத்துரு கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் நாம்

அனைவரையும் பணிவரன்முறை செய்ய வேண்டும் என்று கோரியிருந்தோம். அதை முதன்மை தலைமைப் பொறியாளர் ஏற்றுக் கொண்டார். ஆனால் அதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

ஊதிய குறை தீர்க்கும் பிரிவு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் வெளியாகவில்லை.

அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான காலி பணியிட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. காலிபணியிட எண்ணிக்கை குறைவாக இருக்கும் என்று தெரிய வருகிறது.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்ய வருடாந்திர பட்டியலில் (Annual Planner) பொதுப்பணித்துறைக்கு 50 பதவிகளும், நெடுஞ்சாலைத்துறைக்கு 17 பதவிகளும் வெளியிடப்பட்டது. பொதுப்பணித்துறையில் தலைமைச் செயலகத்தில் நிலுவையில் இருந்த 42 பதவிகளுக்கான கருத்துரு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்ப சங்கத்தின் மூலமாக தீவிர முயற்சிகள் மேற்கொண்டு தற்போது தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு இளநிலைப் பொறியாளர்களின் எண்ணிக்கை 50 + 42 = 92 ஆக ஆக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 46 பதவிகளுக்கான கருத்துரு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்ப மிக தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். இன்னும் இரண்டு வாரத்திற்குள் 46 பதவிகளுக்கான கருத்துரு அனுப்பப்பட்டு பொதுப்பணித்துறைக்கான இளநிலைப் பொறியாளர்களின் எண்ணிக்கை 138ஆக ஆக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

**த. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

# 09.03.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 09.03.2013 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மரியாதைக்குரிய மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், என்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் பொறியாளர்கள் என்.கணேசபிரகாஷ் விதித்திருத்தப் பிரதிநிதி, நா.புண்ணியகோட்டி தலைவர் சென்னைக் கிளை, எஸ்.ஆர்.சுப்ரமணியன் மாநில தணிக்கையாளர், ஏ.திருவேங்கடமூர்த்தி துணைத் தலைவர் மதுரை கிளை ஆகியோர் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் பணிவரன்முறை, இளநிலைப் பொறியாளர் ஊதிய மாற்றம், அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நூற்றாண்டு விழா, டிப்ளமா பொறியாளர் பேரவையின் சங்க விதித்திருத்தம், மூத்தப் பொறியாளர்கள் சிலர் தங்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளின் காரணமாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கும் டிப்ளமா பொறியாளர் பேரவைக்கும் தீங்கு விளைவிக்கும் வண்ணம் செயல்படுவது உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி அவர்கள் தன்னுடைய உரையில் 2006 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற சிலர் 1997 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணிபுரியும் இளநிலைப் பொறியாளர்களுக்கு முன்னதாக முதுநிலையை மாற்றி அமைத்து அரசில் ஆணை பெற்றுள்ளதாக தகவல் வந்துள்ளதாகவும், அது மிகவும் அநீதி என்றும் சங்கம் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பேசினார்.

நூற்றாண்டு விழா குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மையச் சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

விதித்திருத்தப் பிரதிநிதி பொறியாளர் என்.கணேசபிரகாஷ் அவர்கள் விதித்திருத்தம் குறித்துப் பேசினார்.

மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், என்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நூற்றாண்டு விழா மலர், இயக்க வரலாறு குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள்:**

1. தற்போது உள்ள நிலைமையில் பல நூற்றுக்கணக்கான பக்கங்களை கொண்ட இயக்க வரலாறு பாகம்-1, பாகம்-2, "Irrigation Manual" by Ellis தமிழாக்கம் ஆகியவற்றை புத்தகமாக வெளியிட்டால் அதிக பொருட்செலவு ஏற்படும் என்பதால் மேற்கண்ட மூன்று நூல்களை குறுந்தகடுகளாக (DVD) வெளியிடுவது என முடிவு செய்யப்படுகிறது.

2. நூற்றாண்டு விழா மலரை சிறப்பான முறையில் புத்தகமாக வெளியிடுவது எனவும் அதற்கான வேலைகளை ஏப்ரல் 15 தேதிக்குள் முடிப்பது எனவும் முடிவு செய்யப்படுகிறது.

3. சங்கப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட திரு.ஜெ.ஜெயபால்மோகன் நூற்றாண்டு விழாவிற்கு தான் கொடுத்த நன்கொடை பணத்தை திருப்பி தர வேண்டுமென வழக்கறிஞர் மூலமாக நோட்டீஸ் அனுப்பி உள்ளதால் திரு.ஜெ.ஜெயபால்மோகன் மற்றும் அவருடைய நண்பர் திரு.என்.சிவகொழுந்து ஆகியோர் அளித்த நூற்றாண்டு விழா நன்கொடை தொகையை திரும்ப அவர்களுக்கு அனுப்பி விடுவது என முடிவு செய்யப்படுகிறது.

4. தமிழ்நாடு பொறியியல் சங்கம், டிப்ளமா பொறியாளர் பேரவை (DECT) ஆகியவற்றின் நலன் கருதி கீழ்கண்ட நான்கு மூத்தப் பொறியாளர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்ள ஆறு மாத காலத்திற்கு தடை விதிக்கப்படுகிறது.

1. திரு.டி.வி.கோமதிநாயகம் (மாநகராட்சி - ஓய்வு) சென்னை.
2. திரு.கே.வி.வெங்கடேசன் (மருத்துவத்துறை - ஓய்வு) சென்னை.
3. திரு.கோ.சீனிவாசன் (பொதுப்பணித்துறை - ஓய்வு) சேலம்.
4. திரு.எஸ்.எஸ்.சாந்தாராம் (வேலைவாய்ப்புத் துறை - ஓய்வு) சேலம்.

ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றம் (FORDET) தங்கள் கூட்டங்களை நடத்த எந்தவிதமான தடையும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

---

**நூற்றாண்டு விழா மலர் 15.04.2013-க்குள் இறுதி செய்யப்பட உள்ளது. எனவே விளம்பரம் மற்றும் படைப்புகள் ஆகியவற்றை 10.04.2013-க்குள் மைய சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**- பொறியாளர் எஸ்.கண்ணன்,**
வெளியீட்டுச் செயலாளர்.

---

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் செயலாளர் பொறியாளர் N.நாகராஜன் அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் தலைவர் பொறியாளர் N.புண்ணியகோட்டி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# மூத்தப் பொறியாளர்களுக்கு

மூத்தப் பொறியாளர்களிடையே உள்ள இரு தரப்பில் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக செயல்படதான் நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது தமிழ்நாடு பொறியியல் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று சிலர் "விஷம பிரச்சாரம்" செய்வதாக தெரிய வருகிறது. இது முற்றிலும் தவறு. மூத்தப் பொறியாளர்களிடையே கருத்து வேறுபாடு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பாரம்பரியத்திற்கும், இறையாண்மைக்கும் ஒவ்வாத பல விஷயங்கள் நடைபெற்ற போதும் "நடுநிலைமை" என்ற கை விலங்கை மாட்டிக் கொண்டு மௌனமாகத்தான் இருந்தோம். மூன்று வருடங்களாக நடுநிலைமையாக இருந்துவிட்டு திடீரென்று எங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கும், டிப்ளமா பொறியாளர் பேரவை (DECT)க்கும் உறுதுணையாக இருக்க ஆரம்பிக்கப்பட்ட ஓய்வுப் பெற்ற பட்டயப் பொறியாளர் பெருமன்றம் ஒரு சிலரின் ஈகோவினால் தற்போது TNEA, DECT ஆகியவற்றிற்கு கெடுதல் செய்ய ஆரம்பித்ததால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. கிராமத்தில் சொல்வார்களே "மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் விதவை ஆக வேண்டும்" என்பது போல் செயல்பட்டதால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. FORDET சண்டையை FORDET-ல் வைத்துக் கொள்ளாமல் சில ஈகோயிஸ்டுகள் தங்கள் ஆக்டோபஸ் கரங்களை TNEA, DECT ஆகியவற்றை நோக்கி நீட்டியதால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. மூத்தப் பொறியாளர்கள் என்பதால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என்பது நியாயமல்ல.


இந்த பிரச்சினைகளுக்கு "மூலம்" வேறும் "ஈகோ" தான். தான் தான் எல்லோருக்கும் மேலே, தான் நினைப்பதுதான் பக்கத்து வீட்டிலும் நடக்க வேண்டும் என்று சிலர் நினைப்பதால் வந்த கோளாறு. வயதானால் இளைய தலைமுறை, வளர வேண்டியவர்கள், நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்க தோன்றும். ஆனால் இளைய தலைமுறையினரை விட, TNEA, DECT ஆகியவற்றின் நலனை விட தங்கள் ஈகோ தான் முக்கியம் என்று சிலர் செயல்படுவதால் வந்த கோளாறு இது. அழிக்க துடிக்கும் எதிரிகள் மத்தியில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் போராடி சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஆனால் உடன் இருப்பவர்களே முதுகில் குத்தினால் என்ன செய்வது?

தமிழ்நாடு பொறியியல் சங்கம் எடுத்த இந்த நடவடிக்கை சிலருக்கு அதிர்ச்சியாக இருக்கும். சில பிரச்சார பீரங்கிகள் கிளம்பி வருவார்கள். பொய் பேசுவார்கள். கபட நாடகம் ஆடுவார்கள். ஏதாவது முடிவு எடுப்பதற்கு முன்பு கீழ்க்கண்ட மூன்று கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டு கொள்ளுங்கள்.

1. இந்த நான்கு பேர் மட்டும்தான் FORDET-ஆ?
2. TNEA-வை விட இந்த நான்கு பேர்தான் முக்கியமா?
3. "TNEA-விற்கு கெடுதல் செய்வோம் DECT-க்கு கெடுதல் செய்வோம். முடிந்தால் தமிழ்நாட்டிற்கே கெடுதல் செய்வோம். எங்களை ஒரு பயலும் கேள்வி கேட்க கூடாது" என்பது போல் சிலர் செயல்படுவதை ஆதரிக்கிறீர்களா?

எனவே மூத்தப் பொறியாளர்களில் எந்த தரப்புக்கும் ஆதரவாக செயல்பட இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் எப்போதும் போல் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சார்ந்த மூத்தப் பொறியாளர்களை மிகவும் உயர்வாக மதிக்கிறோம்.

- **த.முருகேசன்,** பொதுச் செயலாளர்.

# கலங்கரை  விளக்கம்

**Government of Tamil Nadu**

**Abstract**

Public Works Department - Establishment of State Project Management Unit (SPMU) and creation of new posts for the implementation of Dam Rehabilitation and Improvement Project (DRIP) with World Bank Loan Assistance - Orders - Issued.

---

**Public Works (F1) Department**

**G.O.(Ms) No.211** **Dated 22.08.2012,**
Thiruvalluvar Aandu 2043,
Aavani 6.

Read:-

1. G.O.(Ms) No.88 Public Works (I.Spl.1) dated 15.03.2010.
2. G.O.(Ms) No.341 Public Works Department, dated 26.01.2010.

Read also:

3. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General) Letter No.AEE/T1/AE.I/11931/2003 dated 12.08.2010, 31.08.2010.
4. From the Engineer-in-Chief (Buildings) Chief Engineer (Buildings) Chennai Region and Chief Engineer (General), Public Works Department, Chennai, letter No.AEE/T1/AE.I/11931/2003 dated 10.06.2011, 31.12.2011.
5. From the Chief Engineer (Operation and Maintenance), Water Resources Department, letter No.Ds/6484/98 SPMU dated 10.04.2012.

**ORDER:**

In the G.O. second read above, the Government have accorded administrative sanction for the implementation of Dam Rehabilitation and Improvement Project with World Bank Loan Assistance, at a total cost of Rs.745.49 crore. To meet out the expenditure for the preparatory works, administrative sanction was accorded for Rs.75.00 lakhs in the G.O. first read above. On behalf of the State of Tamil Nadu, Project Agreement was signed by the Chief Engineer (Operation and Maintenance), Water Resources Department on 21.12.2011. The Project will be implemented for a period of six years. The Dam Safety Rehabilitation Directorate in the Central Dam Safety Organisation of Central Water Commission will have the overall responsibility for Project oversight and co-ordination. The Project has three components, namely.

* Rehabilitation and improvement of Dams.
* Dam Safety Institutional Strengthening; and
* Project Management.

In Tamil Nadu, the project is proposed to be implemented in 66 Water Resources Department dams and 38 Tamil Nadu Electricity Board (TANGEDCO) Dams. Water Resources Department, Tamil Nadu Electricity Board (TANGEDCO) and the Agricultural Engineering Department are involved in implementing the project.

2. In his letter third read above, the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General) has stated that as per the Project Appraisal Document of the World Bank, a State Project Management Unit (SPMU) under the control of Chief Engineer with multidisciplinary team specialists and supporting staff, has to be formed for the co-ordination and management of the Project at State Level to look after the following activities:-

* Overall Project Planning, Management and co-ordination, monitoring and evaluation.
* Technical assistance to support the Water Resources Department.
* Overall Procurement administration.
* Procurement administration, control administration for management and budget planning and control.
* Environmental and social safeguard compliance.
* Grievance and compliant handling.
* Liaisoning on all project-related matter with Central Water Commission, Water Resources Department and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO), World Bank and other interested government and non-governmental groups.

The establishment of State Project Management Unit under Dam Rehabilitation and Improvement Project is within the Project cost approved. He had stated that before the commencement of the Project, establishment of State Project Management Unit is very essential in carrying out the preliminary works, such as, clearance on hydrological review study from Central Water Commission, providing technical guidance for the preparation of estimates etc. The Engineer-in-Chief, Water Resources Department, has submitted proposal for the formation of State Project Management Unit (SPMU) under the control of Chief Engineer, Water Resources Department (Operation and Maintenance), Chennai and creation of 50 number of various new posts for the State Project Management Unit, which are to be filled up through departmentally (by transfer or on promotional basis) and by outsourcing. Out of 50 posts the Engineer-in-Chief, Water Resources Department has also requested orders of the Government, permitting the Chief Engineer (operation and Maintenance), Water Resources Department to fill up the following posts through outsourcing for the State Project Management Unit:-

| | | | |
|---|---|---|---|
| (1) Special Quality Control Officer | : 1 | (6) Accountant | : 1 |
| (2) Geologist | : 1 | (7) Data Entry Operator | : 3 |
| (3) Hydrologist | : 1 | (8) Driver | : 4 |
| (4) Instrumentation Expert | : 1 | (9) Watchman | : 2 |
| (5) Web Manager/MIS | : 1 | (10) Office Assistant | : 6 |
| | | Total | 21 |

3. The Government have carefully examined the proposal of the Engineer-in-Chief, Water Resources Department and proposed to accept the same. Accordingly, the Government pass the following orders:-

(i) For the implementation of the Dam Rehabilitation and Improvement Project with World Bank Loan Assistance, a State Project Management Unit (SPMU) be formed under the control of Chief Engineer (Operation and Maintenance), Water Resources Department, with multi-disciplinary team specialists and supporting staff for the co-ordination and management of the Project at the State level.

(ii) 50 number of various temporary posts as detailed in the Annexure to this order be created for the State Project Management Unit.

(iii) Out of 50 new created posts, the Chief Engineer (Operation and Maintenance) Water Resources Department is permitted to fill up 21 posts mentioned in para 2 above through outsourcing and to fill up the rest of 29 posts through the department (by transfer or on promotional basis).

(iv) The post of Office Assistant/Watchman should be filled up only through recruitment by transfer or direct appointment as per the Special Rules for the Tamil Nadu Basic Service.

4. The Pay and allowance for the temporary posts sanctioned in paragraph 3 above shall be debited to the head of account.

"2701 Major and Medium Irrigation - 03 Medium Irrigation - Commercial - 679 Dam Rehabilitation and Improvement Project - Schemes in Twelfth Five Year Plan - II State Plan - PA State Project Management Unit under DRIP - 01 Salaries (D.P.Code 2701 - 03-679-PA.0101)".

5. Necessary additional provision of funds to meet out the expenditure towards the formation of State Project Management Unit ordered in paragraph 3 above will be made in Revised Estimate/Final Modified Appropriation 2012-13. Pending provision of funds, the Engineer-in-Chief, Water Resources Department, Chennai-5 is authorized to incur expenditure and the Engineer-in-Chief, Water Resources Department, is requested to include the expenditure in the proposal for Revised Estimate/Final Modified Appropriation 2012-13 without fail.

6. The Chief Engineer (Operation and Management), Water Resources Department, Chennai is directed to send a compliance report to Government after the formation of State Project Management Unit, along with the details of staff employed.

7. This order issues with the concurrence of Finance Department - vide its U.O.No.45140/PW.II/2012 dated 14.08.2012 and A.S.L.No.906 (Nine Hundred and Six).

(BY ORDER OF THE GOVERNOR)

M. SAIKUMAR,
Secretary to Government.

ஒவ்வொரு புரட்சியும் முதலில் ஒரு மனிதனின்
மனத்தில் சிந்தனையாக இருக்கிறது.

## ANNEXURE

**(G. O. (Ms) No.211 Public Works (F1) Department, dated 22.08.2012)**

Details of temporary posts sanctioned for the State Project Management Unit (SPMU) under Dam Rehabilitation and Improvement Project (DRIP) with World Bank Loan Assistance

| Sl. No. | Name of the Post and Scale of Pay | No. of Posts Sanctioned | New posts to be filled up through Department (by transfer or on promotion basis) | | | | | Posts tobe filledup through outsourcing |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | WRD | TANGEDCO | AED | Fin Dept | Total | |
| 1 | 2. | 3. | 4. | 5. | 6. | 7 | 8. | 9. |
| 1 | Superintending Engineer Rs.37400-67000+8700 (GP) | 1 | 1 | – | – | – | 1 | - |
| 2 | Executive Engineer Rs.15600-39100+7600 (GP) | 3 | 3 | – | – | – | 3 | – |
| 3 | Assistant Executive Engineer Rs.15600-39100+6600(GP) PWD & AED 15700-39100+6100(GP) TANGEDCO | 6 | 4 | 1 | 1 | – | 6 | – |
| 4 | AssistantEngineer/Junior Engineer Rs.15600-34800+5400(GP), Rs.9300-34800+4400 (GP) | 10 | 10 | – | – | – | 10 | – |
| 5 | Junior Draughting Officer Rs.5200-20200+2800(GP) | 1 | 1 | – | – | – | 1 | – |
| 6 | Accounts Officer (in the cadre of Under Secretary to Govt.) Rs.15600-29100+5700(GP) | 1 | - | – | – | 1 | 1 | – |
| 7 | Superintendent Rs.9300-34800+4800(GP) | 2 | 2 | – | – | – | 2 | – |
| 8 | Assistant Rs.5200-34800+2800(GP) | 2 | 2 | – | – | – | 2 | – |
| 9 | Junior Assistant Rs.5200-2000+2400(GP) | 2 | 2 | – | – | – | 2 | – |
| 10 | StenoRs.9300-34800+4800(GP) **Consolidated Pay (outsourcing)** | 1 | 1 | – | – | – | 1 | – |
| 11 | Driver Rs.10,000 | 4 | - | – | – | – | – | 4 |
| 12 | Watchman Rs.10,000 | 2 | – | – | – | – | – | 2 |
| 13 | Special Quality control Office Rs.50,000/- | 1 | – | – | – | – | – | – |
| 14 | Geologist Rs.50,000/- | 1 | – | – | – | - | – | – |
| 15 | HydrologistRs.50,000/- | 1 | – | – | – | - | – | – |
| 16 | InstrumentationExpert s.50,000/- | 1 | – | – | – | – | – | – |
| 17 | WebManager/MIS Rs.50,000/- | 1 | – | – | – | – | – | – |
| 18 | Accountant Rs.15,000/- | 1 | – | – | - | – | – | 1 |
| 19 | DataEntryOperator Rs.10,000/- | 3 | – | – | – | - | – | 3 |
| | **Total** | **50** | **26** | **1** | **1** | **1** | **29** | **21** |

**M.Saikumar,**
Secretary to Government

# நிதி (ஓய்வூதியம்)த் துறை

## அரசாணை எண்.61, நாள் 28.02.2013

## (நந்தன, மாசி-16, திருவள்ளுவர் ஆண்டு 2044)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 - திட்டத்தின் கீழ் வட்டி கணக்கிட்டு வழங்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:-

1. அரசாணை நிலை எண்.136, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 29.02.1984.
2. அரசுக் கடித எண்.64 / DS(C) / ஓய்வூதியம் / 84, நாள் 20.03.1984.
3. அரசாணை நிலை எண்.609, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 30.08.1993.
4. அரசாணை நிலை எண்.351, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 25.04.1984.
5. அரசாணை நிலை எண்.429, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 15.09.2000.
6. அரசாணை நிலை எண்.482, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 10.09.2004.

-----

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 என்ற திட்டம் 01.04.1984 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் விதி 5-இன் படி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகை அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்படும் வட்டியின் அடிப்படையில் கணக்கிடப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

2. இத்திட்டம் நிறைவடைந்த நாளான ஜூலை, 1996க்குப் பின் பொது வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்பட்டு வரும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் வட்டி வழங்கிட இறுதியாக பார்வை ஆறில் காணும் அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 1984-இன் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகையினை அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு அரசால் வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்தின் கீழான பிற நிபந்தனைகள்/விதிமுறைகளில் மாற்றம் ஏதுமில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

---

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் தலைவர் பொறியாளர் N.புண்ணியகோட்டி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.1,000 (ரூபாய் ஆயிரம்) சென்னை கிளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.தண்டபாணி அவர்கள் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம்) சென்னை கிளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# நிதி (ஓய்வூதியம்)த் துறை

**அரசாணை எண்.62, நாள் 28.02.2013**

**(நந்தன, மாசி-16, திருவள்ளுவர் ஆண்டு 2044)**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 - திட்டத்தின் கீழ் வட்டி கணக்கிட்டு வழங்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:-

1. அரசாணை நிலை எண்.504, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 02.11.2000.
2. அரசுக் கடித எண்.75910 / ஓய்வூதியம் / 2000-1, நாள் 02.11.2000.
3. அரசுக் கடித எண்.75910 / ஓய்வூதியம் / 2000-2, நாள் 02.11.2000.

-----

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 என்ற திட்டம் 01.10.2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 1984ல் ஏற்கெனவே சந்தாத் தொகை செலுத்தியவர்களுக்கு விருப்பத்தின் பேரில் மாதம் ரூ.50/-ம், 01.10.2000க்குப் பிறகு பணியில் சேருபவர்களுக்கு மாதம் ரூ.70/-ம் சந்தாத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

3. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டி ஆண்டுக்கு 11% அடிப்படையில் கணக்கிடப்பட்டு, மாதம் ரூ.70/- செலுத்துபவர்களுக்கு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படியும், மாதம் ரூ.50/- சந்தாத் தொகை செலுத்துபவர்களுக்கு பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படியும் முதிர்வுத் தொகை வழங்கப்படுகிறது.

4. இனிவருங்காலங்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-இன் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகையினை 31.03.2013 வரையிலான காலத்திற்கு பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதங்களில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படி கணக்கிட்டும் மற்றும் 01.04.2013க்குப் பிறகு அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு அரசால் வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டும் வழங்கிட அரசு ஆணையிடுகின்றது.

5. இத்திட்டத்தின் கீழான பிற நிபந்தனைகள்/விதிமுறைகளில் மாற்றம் ஏதுமில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்,

அரசு முதன்மைச் செயலாளர்.

*இளமையில் முகம் அழகு. முதுமையில் ஆன்மா அழகு*

## பிப்ரவரி - 2013 பொறியாளர் இதழிலிருந்து

**பொதுச் செயலாளர் மடல்:**

அரசாணை எண்.1, பொ.ப.து. நாள் 02.01.90ன் படி நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பணிவரன்முறை உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள SLP யைப் பற்றி அந்த வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதால், உச்சநீதி மன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அந்த வழக்கு 05.01.2012 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் உயர்நீதி மன்றத்தில் விசாரிக்கும்படி உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, மீண்டும் உயர்நீதி மன்றத்தில் மறு ஆய்வு மனு செய்யப்பட்டது. அதுவும் 06.11.2012 அன்று விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. எனவே விரைவில் உச்சநீதி மன்றத்திற்கு செல்ல உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**Proceedings of the Eighth Parent Executive Committee Meeting of AOE & AEA held on 01.03.2013 in Chennai:**

**Court Cases:**

Er.K.Murugan, Joint Secretary - Legal Affairs / AOE briefed about the cases pending in the Hon'ble Madras High Court and Supreme Court @ New Delhi with particular reference about the G.O.Ms.No.1 PWD dated 02.01.90 and Challenging the promotion of Technical Assistants as Assistant Engineers which was recently heared in the High Court for which orders are expected.

**FIX A MINIMUM QUALIFICATION FOR ALL SECTION LEVEL POSTS IN PWD AS A DEGREE IN ENGINEERING:**

To enhance the qualities in Public Works Department, Degree in Engineering either full time or part time shall be made as a basic qualification for all the section level posts and they must be recruited only through TNPSC, as TNPSC is conducting examinations in two stages (written and oral) and selecting efficient candidates as Assistant Engineers (one out of 30 applicants).

The minimum qualification prescribed for professionals like practising advocates are BL/BGL and for the allopathy Doctors are MBBS, whereas, in the Engineering Departments the qualifications are fixed as degree/diploma for the section level posts even in these modern days. Advanced technical knowledge and higher skills are must for handling works pertaining to sections to cope up with modern trends.

Five hundred and more Engineering Colleges in Tamil Nadu alone produce Five thousand and more graduated civil engineers every year who are also having computer skills in addition. Sufficient number of out-coming graduates are available to meet the demand of all engineering departments including Public Works Department.

Competent graduated engineers screened through TNPSC Exams alone can meet the standards of State funding Agencies such as World Bank, Central Government and other International Agencies for obtaining fund and for efficient planning, investigation, designing, estimation and supervision etc. High rise buildings

with provisions to earth quake resistance are proposed and executed with high technical skills. Maintaining the standards of reservoirs and up-keeping the records for assessing the Dam Safety are possible only if these Sections are posted/filled with graduated engineers recruited by TNPSC. These eminent engineers alone can meet the challenges of the department.

A special order is paving backdoor way for the working diploma holders at sections and overseers, draughtsmen, Technical Assistants in departments are becoming redesignated Assistant Engineers after acquiring part time BE degree without undergoing TNPSC exams. Highly competent and qualified graduated / Degree engineers recruited through TNPSC are frustrated as their seniorities are badly affected by the redesignated Assistant Engineers who have not been screened and not recruited through TNPSC which deteriorates the quality of PWD.

It is open and clear to everyone in the department that the graduated engineers who posses more qualification (B.E.) and possess high technical knowledges shall be recruited only through TNPSC every year for all the section level posts to make the Department more serviceable and more efficient.

# நம்மவர்

## பிற துறையில் பிரபலமாகியிருக்கும் பட்டயங்கள்:

தன்னுடைய எளிமையாலும் உண்மையான உழைப்பாலும் நேர்மையுடன் நூறாண்டு காலம் வாழ்ந்து, அரசுக்கு திவானாக ஆலோசனை நல்கி பல திட்டங்களை சிறப்பாக முடித்த பொறியாளர் மாமேதை விஸ்வேஸ்ரய்யா.

கர்நாடக அரசின் பொதுப்பணித்துறையில் ஓவர்சியராக சில காலம் பணிபுரிந்து விட்டு, பிற்காலத்தில் அரசியலில் நுழைந்து, இந்திய நாட்டின் பிரதமராக ஆன தேவகவுடா.

தமிழகப் பொதுப்பணித்துறையில் இளம் பொறியாளராகப் பணிபுரிந்து விட்டு, தீவிர அரசியலில் காலை வைத்து, பேச்சாற்றல் செயலாற்றல் கொண்டு சிறந்த நிர்வாகி என பெயரோடு விளங்கிக் கொண்டிருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு.

இந்தியன், ஜென்டில்மேன், காதலன் போன்ற வெற்றிப் படங்களைத் தந்து திரையுலகில் தன்னை ஒரு முதல்வனாக ஆக்கிக் கொண்ட இயக்குநர் ஷங்கர்.

தமிழக ஆளுங்கட்சியில் சுறுசுறுப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர், தினகரன்.

நூற்றுக்காணக்கான மேடைகளில் பாமரர்களும் ரசிக்கும் வகையில் நாடகங்கள் தந்து, திரையுலகிலும் ஜொலித்துக் கொண்டிருக்கும் எஸ்.வி.சேகர்.

திரைப்பட தமிழ் பாடல்கள் மட்டுமல்லாது பன்மொழிப் பாடல்களையும் மேடையில் பாடி ஆர்க்கஸ்ட்ராவின் முன்னோடியாகத் திகழும் ஏ.வி.ரமணன்.

பொதுப்பணித்துறையை பெருமைக் கொள்ள செய்யும் கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்கள் கவிதை, நிகழ்ச்சி தொகுப்பு போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்.

(பட்டியலில் விட்டுப் போனவர்களைப் பற்றி தெரிந்தவர்கள் "நம்மவரை"த் தொடருங்கள்)

-ஆர்.கே.எஸ்.வடபழனி.

# இயங்கும் உலகம்

## தேனி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தேனி கிளையின் கூட்டம் 20.02.2013 அன்று மாலை தேனி பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது. உபதலைவர் ச.சந்திரசேகர் அவர்கள் மையச் சங்க நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தார். பொருளாளர் மா.சென்ராம் அவர்கள் 2013ம் ஆண்டு உறுப்பினர் கட்டணம் விரைந்து கொடுத்திட கேட்டுக் கொண்டார். தேனி கிளையின் தலைவர், செயலாளர் ஆகியோர் வேறு கிளைக்கு மாற்றலாகிவிட்டதாகவும், இணைச் செயலாளர் ஆர்.சேகர் அவர்கள் ஓய்வு பெற்றதாலும் அவர்களுக்கு பதில் கீழ்கண்ட புதிய பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | எஸ். சந்திரசேகரன் |
| உபதலைவர் | - | வி. பாலமுருகன் |
| செயலாளர் | - | என். முத்தையா |
| இணைச் செயலாளர் | - | சண்முகநாதன் |

இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்:

1. இளநிலைப் பொறியாளர் ஊதிய விகிதம் மாற்றியமைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.
2. இளம் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பணிவரன்முறை பெற துரித நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.
3. 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊட்டுப் பதவியிலிருந்து இளம் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு நீதிமன்ற தடையாணை ஏதும் இல்லாமையால் அவர்களின் பணிவரன்முறை பெற துரித நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.
4. டிப்ளமா முடித்து 10 வருடம் பணிமுடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் / இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று தர சங்கம் விரைந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிட சங்கம் எடுக்கும் எந்த முடிவுக்கும் தேனி கிளை முழு ஒத்துழைப்பு கொடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## திருச்சி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., திருச்சி கிளையின் பொறியாளர்கள் பதவி உயர்வு பாராட்டு விழா மற்றும் 2013 புத்தாண்டு பொதுக்குழுக் கூட்டம் 29.12.2012 சனிக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் திருச்சி, மன்னார்புரம், பொறியாளர் முருகானந்தம் இல்லம், பொறியாளர்கள் ஹம்ஜா - கேசவராவ் - அடைக்கலதுரை அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திருச்சி கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமையேற்றார். கூட்டத்திற்கு மைய சங்க சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலத் துணைத் தலைவர் பொறியாளர்

என்.எஸ்.கௌரிசங்கர் மற்றும் கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். திருச்சி கிளையின் சார்பில் சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு சிறப்பு பரிசுகள் திருச்சி கிளையின் சார்பாக வழங்கப்பெற்றது.

இறைவணக்கத்திற்கு பின் உறுப்பினர்களின் சுய அறிமுகம் நடைபெற்றது. கூட்டத்தில் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் எஸ்.விவேகானந்தன் அவர்களின் தாயார் 29.10.2012 அன்று இறந்ததற்கும், தலைநகர் புதுடெல்லியில் பாலியியல் வன்செயலால் உயிரிழந்த மாணவிக்கும் இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி அனுசரிக்கப் பெற்றது. தொடர்ந்து திருச்சி கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் எஸ்.கந்தசாமி அவரது வரவேற்புரைக்கு பின்னர் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்கள் தமது தலைமையுரையில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தும், உறுப்பினர்களின் வருகை குறித்து வருத்தம் தெரிவித்து, தவறாது கிளைக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்தார். புத்தாண்டு சிறப்பு பரிசுகள் வழங்க நன்கொடை வழங்கிய பதவி உயர்வு பெற்ற திருச்சி கிளையின் உறுப்பினர்கள் பொறியாளர்கள் என்.செல்வராஜன், பி.நாகராஜன், ஏ.முத்தையன், எஸ்.குருநாதன், ஆர்.கல்யாணகிருஷ்ணன் ஆகியோர்க்கு கிளையின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து கிளையின் செயலாளர் பொறியாளர் டி.செல்லன் அவர்கள் உரையில் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தும், கடந்த ஓராண்டு காலத்தில் மைய சங்க நடவடிக்கைகளின் குறைகளை சுட்டிகாட்டியும் மைய சங்க பொறுப்பாளர்கள் மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். அடுத்ததாக கிளையின் பொருளாளர் பொறியாளர் என்.சிவகுருநாதன் அவர்கள் உரையில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தும், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டிற்குரிய நாட்சுவடி உரிய நேரத்தில் வழங்க இயலாததற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார். மேலும் வருங்காலங்களில் உரிய நேரத்தில் உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திட மையச் சங்க பொறுப்பாளர்களை கேட்டுக் கொண்டார்.

அடுத்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில துணைத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்கள் ஊதிய முரண்பாடுகளை களைய மையச் சங்கம் எடுத்த நடவடிக்கைகள் பற்றியும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து, அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு ஆணை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மற்றும் கோப்பின் இன்றைய நிலைகுறித்தும் எடுத்துரைத்தார். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டிற்குரிய நாட்சுவடி உரிய நேரத்தில் வழங்க இயலாததற்கு வருத்தம் தெரிவித்து, அதற்கான காரணத்தையும் தெரிவித்துக் கொண்டார். மேலும் நாம் கொண்டாடவிருக்கும் சங்க நூற்றாண்டு விழாவிற்கு நன்கொடை தொகையினை உறுப்பினர்கள் உரிய காலத்திற்குள் வழங்கி விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்கள். கூட்டத்திற்கு தாமதமாக வந்தாலும் தமது எழுச்சியுரையால் அனைவரையும் கவர்ந்திட்ட சிறப்பு அழைப்பாளர் கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், தாமதமாக கூட்டத்திற்கு வருகை புரிந்தமைக்கு வருத்தம் தெரிவித்தும், அதற்கான காரணத்தை அவையில் அறிவித்து, உறுப்பினர் வருகை குறித்து வருத்தம் தெரிவித்தும், மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து கீழ்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**தீர்மானங்கள்:**

1. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி, சேதுராப்பட்டி உட்பட தமிழகத்தில் பத்து அரசினர் தொழில் நுட்ப கல்லூரி துவங்கிட ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை இப்பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

2. திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் எஸ்.விவேகானந்தன் அவர்களின் தாயார் 29.10.2012 அன்று இறந்ததற்கும், தலைநகர் புதுடெல்லியில் பாலியியல் வன்செயலால் உயிரிழந்த மாணவிக்கும் ஆழ்ந்த இரங்கலை இப்பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

3. துறையில் வரைவாளர் பதவியில் இருந்து உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கும், தொழில் நுட்ப உதவியாளர் பணியில் இருந்து இளம் பொறியாளர் / உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பணிவரன்முறை குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மைய சங்கத்தினை இப்பொதுக்குழு அன்போடு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

4. துறையில் இளம் பொறியாளர் பதவிக்கு 3:1 விகிதாசாரம் கொண்டு தமிழ்நாடு அரசுப் பணி தேர்வாணையம் மூலம் நிரப்பிட உரிய நடவடிக்கை எடுத்திட மைய சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

5. பொதுப்பணித்துறையில் பிரிவிற்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் / பாசன ஆய்வாளர் பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணி தேர்வாணையம் மூலம் நிரப்பிட உரிய நடவடிக்கை எடுத்திட மைய சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

6. சமவேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில், பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து வரும் இளம் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் இடையே உள்ள ஊதிய முரண்பாட்டினை களைந்திட விரைந்து நடவடிக்கை எடுத்திட மைய சங்கத்தினை இப்பொதுக்குழு அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

7. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு ஆணையினை மீதமுள்ள 101 நபர்களுக்கு விரைவில் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள மைய சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

8. நமது சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அடையாள அட்டை மைய சங்கம் மூலம் வழங்க நடவடிக்கை எடுத்திட மைய சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

பின்னர் திருச்சி கிளையின் உறுப்பினர்கள் பொறியாளர்கள் என்.செல்வராஜன், பி.நாகராஜன், ஏ.முத்தையன், எஸ்.குருநாதன், ஆர்.கல்யாணகிருஷ்ணன் ஆகியோர் உதவிச் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றமைக்கு கிளையின் சார்பாக பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களுக்கு கிளையின் சார்பாக பொன்னடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப் பெற்றது. உதவிச் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களை கிளையின் மூத்தப் பொறியாளர்கள் அ.கேசவராவ், என்.திருநாவுக்கரசு மற்றும் எஸ்.பட்டாபிராமன் ஆகியோர் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து, துறையில் மேலும் அவர்கள் பணி சிறக்க வாழ்த்துரைகள் வழங்கினார்கள். நேரமின்மையை கருத்தில் கொண்டு கிளை பொறுப்பாளர்கள் பொறியாளர் ஆர்.தயாளகுமார், எஸ்.கந்தசாமி மற்றும் டி.செல்லன் ஆகியோர் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களை வாழ்த்தி பேசினார்கள். பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் என்.செல்வராஜன், பி.நாகராஜன், ஏ.முத்தையன், எஸ்.குருநாதன், ஆர்.கல்யாணகிருஷ்ணன் அவர்கள் தமது ஏற்புரையில் சங்கத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிறைவாக கிளையின் பொருளாளர் பொறியாளர் என்.சிவகுருநாதன் அவர்கள் நன்றியுரைக்கு பின்னர் தேனீர் விருந்துடன் மாலை 6.30 மணிக்கு கூட்டம் இனிதே முடிவுற்றது.

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 APRIL 2013
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# அறிவிப்பு

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் ஆகியோருடன் 19, 20.03.2013 ஆகிய இரு தினங்களில் நடைபெற்ற சந்திப்பின் போது இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறையை (Regularisation) மிக விரைவில் முடித்து தருவதாகவும், இதற்காக போராட்டங்கள் வேண்டாம் என்றும் உறுதி அளித்ததின் பேரிலும், முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து பணிவரன்முறை பிரச்சினையை முடித்து தருவதாக வாக்குறுதி அளித்ததின் பேரிலும், இளநிலைப் பொறியாளர் பணிவரன்முறை பிரச்சினையில் மெத்தன போக்கை கடைபிடித்து வந்த பொறுப்பற்ற அதிகாரிகளை கண்டித்து தமிழ்நாடு பொறியியல் சங்கம் அறிவித்திருந்த நான்கு கட்ட போராட்டங்கள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி: பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர் :
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 3.4.2013 Posting on 5.4.2013
**REGD. NEWS PAPER**
**POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL**
**POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM**

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN.,** D.C.E., B.Tech., GENERAL SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223